தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 4424/SCIC/2023**

திருமதி காந்திமதி — மேல்முறையீட்டாளர்
எண்.23, வையாபுரி நகர்
திருநெல்வேலி - 627 006.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம் ------ பொது அதிகார அமைப்பு
மதுரை காவல் ஆணையரகம்
மதுரை

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 17/04/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **5. எனவே, தற்போதைய பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி திரு.ஆர்.ஜெயராமன், காவல் உதவி ஆணையர், மாநகரக் குற்ற ஆவணக் காப்பம், மதுரை மாநகர் அவர்கள், இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரர் கூறியவாறான புகார் குறித்து விசாரணையை நடத்தவும், அதன் பின்னர், அவ்விசாரணை முடித்து, அதன் அறிக்கையினை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்ப வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேற்குறிப்பிட்ட விசாரணை அறிக்கையின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பின், அதனை மாநகரக் காவல் ஆணையாளர்,**

மதுரை அவர்களுக்கு அனுப்புவதோடு, அதன் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறப்படுகின்ற அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை 29/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேற்குறிப்பிட்டவாறு 29/05/2025-க்கு பதிலாக இன்று (05/06/2025), பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.R.ஜெயராம், காவல் உதவி ஆணையர், மாநகரக் குற்ற ஆவணக் காப்பகம், மதுரை மாநகரக் காவல், மதுரை அவர்கள் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு விசாரணை அறிக்கையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததோடு, அவ்வறிக்கையின் நகல் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பியதாகவும், அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்ட விசாரணையின் வாயிலாக, புலனாய்வு அதிகாரி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிற போது சில தவறுகளை செய்திருப்பது தெரியவந்ததாகவும், அவ்விவரத்தை மாநகரக் காவல் ஆணையாளர், மதுரை அவர்களுக்கும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

<u>**வழக்கு எண். SA 4424/SCIC/2023**</u>

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
மதுரை காவல் ஆணையரகம்
மதுரை

**மேல்முறையீட்டாளர்**

திருமதி காந்திமதி
எண்.23, வையாபுரி நகர்
திருநெல்வேலி - 627 006.

.

RG/PC